மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.
அ.வ.எண். 14-2024

2026–ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15–ஆம் நாள் வாதியாகிய என்னால் 1969–ஆம் ஆண்டின் 44–வது சட்டவிதி ஏற்பாட்டின்படி திருமதி. G. சுதா., B.Sc., B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | ராமச்சந்திரன் | PW 1 | தாலுக்கா: | |
| தந்தை பெயர்: | சொக்கலிங்கம் | | சமயம்: | |
| கிராமம்: | | | வயது : | 60/2026 |
| தொழில்: | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2026

## முன் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண ஆணையுறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதை நான் படித்துப் பார்த்தேன். அதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி எனது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள வா.சா.1 மூலம் கீழ்க்கண்ட ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

வா.சா.ஆ.1 12.12.2005 தேதியிட்ட 2–ஆம் பிரதிவாதிக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணை–சான்று நகல்

வா.சா.ஆ.2 30.11.1998 தேதியிட்ட வாதியின் தகப்பனார் திரு. சொக்கலிங்கம் வாங்கிய கிரயப்பத்திரம்–அசல்

வா.சா.ஆ.3 11.02.2017, 15.03.2018, 02.02.2023 தேதிகளிட்ட வாதியின் வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை–3)–அசல்

வா.சா.ஆ.4 06.06.2013, 11.06.2018, 10.12.2019 தேதிகளிட்ட வாதியின் மின்கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை–3)–அசல்

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 15.07.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**